www.tamilarangam.net

21/8/87 ஈழநாடு

# இன்று நடைபெறும் மாணவர் குழுவின் பொதுக் கூட்டம்

இன்று காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுவினரால் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்படும். பல்கலைக்கழக மாணவன் நயாகரன் தொடர்பான விடயங்களும் ஏனைய விடயங்களும் இதில் ஆராயப்படும். இதில் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா கலந்து கொள்வார்

இது தொடர்பாக மாணவர் அமைப்புக் குழுவினர் விடுத்திருந்த அறிக்கையின் விபரம்

(—4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நடை

தருகிறோம்:

28.4.1987 அன்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் பி. நயாகரன் காணாமற் போனார். இது தொடர்பாக நயாகரனின் பெற்றோர் மூலம் பல்கலைக்கழக நிர்வாகமும் மாணவர்களும் ஏற்கனவே அறிந்திருந்தனர்.

17.7.87 அன்று, காணாமற்போன மாணவன் நயாகரன் எழுதிய கடிதம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மூலம் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வந்திருந்தது. அக்கடிதத்தில் நயாகரன் தான் L.T.T.E. உறுப்பினர்களால் கடத்தப்பட்டதாகவும் 16.7.87 அன்று தான் முகாமிலிருந்து தப்பிவந்து இக்கடிதத்தை எழுதுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்திற்கு எவ்வித பதிலும் கிடைக்காதவிடத்து 11.8.87 அன்று மேலும் 4 கடிதங்கள் ஆசிரியர் சங்கம், விஞ்ஞான பீடம், துணைவேந்தர், ஆசிரியர் சங்கம் - யாழ் பல்கலைக்கழகம், மாணவர் அமைப்புக் குழு, ஆகியோருக்கு வந்திருந்தன. இக்கடிதத்தில் பி.நயாகரன் தான் மீண்டும் பல்கலைக்கழகம் வந்து படிப்பினைத் தொடர உத்தரவாதத்தைப் பெற்றுத்தரும்படி குறிப்பிட்டிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக 18.8.87 அன்று மாணவர்கள் கூடி மாணவர் குழு அமைக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை 19.8.87 அன்று சந்தித்தனர். இச்சந்திப்பில் மாணவர் குழுவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. அவையாவன:-

1. பி நயாகரனை தாமே கைதுசெய்ததாகவும், அது அரசியல் காரணங்களுக்காக வென்றும் அவரது விசாரணை முடிந்து விட்டமையால் மீண்டும் நயாகரன் பல்கலைக்கழகம் வந்து கல்வி கற்க இனி எவ்விதமான அச்சுறுத்தலும் இருக்கமாட்டாது என்றும் மாணவர் குழுவிற்கு உறுதியளித்திருந்தனர்.

மாணவர் குழுவின் வேண்டுகோள்:-

பி.நயாகரன் எங்கிருப்பினும் உடனடியாக பல்கலைக்கழகத்திற்கு வருமாறு வேண்டுகிறோம்.

ஈழநாடு
21/8/87

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்